# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட்,

நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590


**ஆணை நாள் 03.06.2025**

**முன்னிலை**

**திரு. ரா. பிரியகுமார், பி.எஸ்.சி,, பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்கள். SA 18762/B/2022, SA 545/B/2023**

திருமதி. ஜோதிமுத்து முத்துராஜ் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
ஸ்ரீவில்லிப்புத்தூர் ஊராட்சி ஒன்றியம்,
விருதுநகர் மாவட்டம் - 626 125.
-- பொது அதிகார அமைப்பு

**இறுதி ஆணை**

இவ்வாணையத்தால் (24.01.2025) அன்று அயன்நாச்சியார்கோவில் ஊராட்சியில் அம்மா ஊரக விளையாட்டு மைதானத்தை சீரமைத்து, மைதானத்தை முழுமையாக பயன்படுத்தும்படி அறிவுறுத்தப்பட்டு, அந்த அறிக்கையை ஆணையத்திற்கு நேரில் சமர்பிக்கும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டதனைத் தொடர்ந்து, திருமதி.எம்.சண்முகபிரியா, வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ.), ஸ்ரீவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியம் மற்றும் திருமதி.இரா.பூங்கொடி, பொது தகவல் அலுவலர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ), ஸ்ரீவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியம், விருதுநகர் மாவட்டம் அவர்கள் (03.06.2025) இன்று நேரில் ஆஜராகி அயன்நாச்சியார்கோவில் ஊராட்சியில் அம்மா ஊரக விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்ட இடத்தினை அயன்நாச்சியார்கோவில் ஊராட்சி செயலர் மற்றும் மனுதாரர் திருமதி.ஜோதிமுத்து முத்துராஜ் என்பவருடன் கலந்துகொண்டு சமூக பணியாக மைதானத்தில் உள்ள தேவையற்ற செடி கொடிகளை சீர்படுத்தி தற்போது அம்மா ஊரக விளையாட்டு மைதானம் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பெற்றுள்ளது என்ற விவரத்தினை புகைப்பட ஆதாரத்துடன் ஆணையத்தின்முன்பு சமர்ப்பித்தனர். இந்த அறிக்கையினை ஏற்று மேற்கொண்டு இந்த மைதானத்தை தொடர்ந்து கண்காணிக்கவும், சமூக ஆர்வலர்கள் துணைகொண்டு இந்த மைதானத்தை

தொடர்ந்து பயன்படுத்தும்படி திருமதி.எம்.சண்முகபிரியா, வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ.), ஸ்ரீவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு, இந்த மனு முற்றாக்கம் செய்யப்படுகிறது.

**ஒம்/-(ரா. பிரியகுமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண்கள். SA 18762/B/2022, SA 545/B/2023</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
ஸ்ரீவில்லிப்புத்தூர் ஊராட்சி ஒன்றியம்,
விருதுநகர் மாவட்டம் - 626 125.

வட்டார வளர்ச்சி அலுவலர்,
ஸ்ரீவில்லிப்புத்தூர் ஊராட்சி ஒன்றியம்,
விருதுநகர் மாவட்டம் - 626 125.

<u>மேல்முறையீட்டாளர்</u>
திருமதி. ஜோதிமுத்து முத்துராஜ்,
எண்.7/243, அம்மன் நகர்,
நாச்சியார்பட்டி அஞ்சல்,
திருவில்லிப்புத்தூர் வட்டம்,
விருதுநகர் மாவட்டம் - 626 135.
செல்.88709 96682.

Copy to: File GP PC